ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2016.09.15 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடு – 2016 ஓகத்து

- **தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** 2016 யூலையின் 50.6 இலிருந்து ஓகத்தில் 53.5 இற்கு அதிகரித்தது. இது 2.9 சுட்டெண் புள்ளிகள் கொண்டதொரு அதிகரிப்பாகும். ஓகத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு புதிய கட்டளைகள், தொழில்நிலை மற்றும் உற்பத்திச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளே தூண்டுதலாக அமைந்தன. தயாரிப்புத் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் மாற்றமடையாது காணப்பட்ட கொள்வனவுகளின் இருப்பு தவிர, அனைத்துத் துணைச் சுட்டெண்களும் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. குறிப்பாக, புதிய கட்டளைகள், தொழில்நிலை மற்றும் நிரம்பலர் வழங்கல் நேர சுட்டெண்கள் யூலையில் அவதானிக்கப்பட்ட சுருக்கத்திலிருந்தும் மீட்சியடைந்தன. ஒட்டுமொத்த தரவுப் புள்ளிகள் விரிவாக்கமொன்றினைக் கொண்டிருந்தவிடத்து மற்றைய அனைத்துச் சுட்டெண்களும் சமநிலையான 50.0 அடிமட்டத்திற்கு மேலே காணப்பட்டன. நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் அடுத்த மூன்று மாதங்களுக்கு முன்னேற்றமொன்றினை எடுத்துக்காட்டின.

- **பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** 2016 யூலையின் 57.8 இலிருந்து ஓகத்தில் 61.2 இற்கு அதிகரித்தது. கடந்த ஆண்டின் பெறுமதியிலும் பார்க்க கொள்வனவாளர் முகாமைத:துவச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பானது, பணிகள் துறையின் பொருளாதார நடவடிக்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஓகத்தில் உயர்ந்த வீதத்தில் உயர்வடைந்தமையினை எடுத்துக்காட்டியது. பணிகள் கொள்வனவு முகாத்துவச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கை, தொழில்நிலை மற்றும் நடவடிக்கை துணைச் சுட்டெண்களுக்கான எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் பக்கபலமாக விளங்கின. நிலுவையிலுள்ள பணிகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் ஓகத்தில் வீழ்ச்சியடைந்தன. நிலுவையிலுள்ள பணிகளில் வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் புதிய வியாபாரங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஏற்பட்ட உயர்வு பணிகள் துறைக்குள் ஏற்பட்டு வரும் வினைத்திறன் மட்டங்களின் அதிகரிப்பினையும் நடவடிக்கைகளுக்கான உயர்த்தப்பட்ட எதிர்பார்ப்பிற்கான இயலாற்றலின் சுயாதீனமான தன்மையினையும் எடுத்துக்காட்டின. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் தொகுப்புச் செயன்முறையில் பரிசீலனைக்கு எடுக்கப்படாத விலைகள் கட்டண சுட்டெண் 2016 மேயில் காணப்பட்ட அதன் உச்சிமட்டங்களிலிருந்து தொடர்ந்து இரண்டு தடவைகள் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் 2016 ஓகத்தில் அதிகரித்தது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஓகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தயாரிப்பு | 2015 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | 67.3 | 57.5 | 55.5 | 56.5 | 53.2 | 57.8 | 54.8 | 57.9 |
| | 2016 | 51.9 | 55.3 | 60.7 | 41.6 | 47.9 | 55.1 | 50.6 | 53.5 | - | - | - | - |
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பணிகள் | 2015 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | 66.8 | 65.0 | 60.6 | 59.8 | 61.7 | 59.5 | 59.3 | 60.2 |
| | 2016 | 58.0 | 59.3 | 61.6 | 54.7 | 58.1 | 56.3 | 57.8 | 61.2 | - | - | - | - |






**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு $=50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு $>50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு $<50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலின் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| வேலையில் நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.